# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
# அசல் வழக்கு எண். 5/2011 மற்றும் அசல் வழக்கு 92/16

வா.சா.1- குறுக்கு விசாரணை - நாள் 26-06-2023.
பெயர் = கருப்பசாமி வா.சா.1
வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி, அசல் வழக்கு எண் 5/2011 வழக்கின் 2ம் பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) எனக்கு வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை லக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 லக்க சொத்திற்கு என்கிறார் சாட்சி. தாவாச் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண் 92/16 வழக்கில் எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதிலும் இரண்டு லக்க சொத்துக்களுக்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்கிறார் சாட்சி. என்ன பரிகாரம் கோரி, நான் வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் மடத்துச் சொத்தை ராமலிங்க சன்னியாசியின் சிஷ்யன் என்ற முறையில் நான் நிர்வாகம் செய்து வருகிறேன் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்கிறார் சாட்சி. நான் ராமலிங்க சன்னியாசியின் சிஷ்யன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தீர்மானம் போட்டு மடத்தை நடத்துகிறேன் என்கிறார் சாட்சி. அது என்ன தீர்மானம் என்று சொல்லமுடியுமா என்றால் மடத்தைப் பராமரிப்பதற்கும், கடை வாடகை வசூல் செய்து குருபூஜை நடத்துவதற்கும் உரிய தீர்மானம் என்கிறார் சாட்சி. அந்த தீர்மானத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்கிறார் சாட்சி.

(2) நான் சொல்லும் டிரஸ்ட் முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளதா? என்றால் இல்லை என்கிறார் சாட்சி. பதிவு செய்யப்படாமல் கிராம மக்கள் அனைவரும் என்னை டிரஸ்டியாக தேர்ந்தெடுத்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம் என்கிறார் சாட்சி. எங்கு வைத்து தேர்ந்தெடுத்தார்கள் என்றால் மடத்தில் வைத்து தேர்ந்தெடுத்தார்கள். யார், யாரெல்லாம் என்னை டிரஸ்டியாக தேர்ந்தெடுத்தார்கள் என்றால் கிராமதததில் உள்ள பெரியோர்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்கிறார் சாட்சி. கிராம பெரியவர்கள் பெயர் சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை என்கிறார் சாட்சி. எந்த தேதியில் தேர்ந்தெடுத்தார்கள் என்று தெரியுமாஎன்றால் 1983ம் வருடம் 1வது மாதம் 9ம் தேதி என்கிறரர் சாட்சி. அந்தநாள்தான் ராமலிங்கசுவாமி இறந்த நாள் என்கிறார் சாட்சி. கிராமத்து பெரியவர்கள் என்று சொல்வது எந்த கிராமம் என்றால் தும்மசின்னம்பட்டி என்கிறார் சாட்சி. அந்த

கிராமத்தில் மொத்தம் எத்தனை சாதி மக்கள் இருக்கிறார்கள் என்றால் 3 ஜாதி மக்கள் இருக்கிறார்கள் என்கிறார் சாட்சி. அவர்கள் என்னென்ன ஜாதி என்றால் தேவர், செட்டியார், நாயக்கர் என்கிறார் சாட்சி. மேற்படி மூன்று சமுதாய மக்களும்தான் என்னை தேர்ந்தெ தடுத்தார்களா என்றால் செட்டியார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் தேர்ந்தெடுத்தார்கள் என்கிறார் சாட்சி. செட்டியார்கள் மட்டும் தேர்ந்தெடுத்ததற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால், ராமலிங்க சுவாமிக்கு சொத்து கொடுத்தவர்கள் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் செட்டியார் சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்னை டிரஸ்டியாக தேர்ந்தெடுத்தார்கள் என்கிறார் சாட்சி.

(3) செட்டியார் சமுதாயத்தைசேர்ந்த யார், யார் ராமலிங்க சுவாமிக்கு சொத்து கொடுததார்கள் என்றால் மகாலிங்க செட்டியார் மகன் சாத்தையா செட்டியார், அழகிரி செட்டியார் மகன் நல்லையா செட்டியார், நல்லையா செட்டிய்ார் மைனர் மகன் ஆண்டார் சாமி என்கிறார் சாட்சி. மேற்படி மூவரும் எந்ததேதியில், எவ்வளவு சொத்தை கொடுத்தார்கள் என்றால் தேதி தெரியாது. ஒரு ஏக்கர் சொத்தை 1940ல் கொடுத்தார்கள் என்கிறார் சாட்சி. கிரையமாக கொடுத்தார்களா, தானமாகக் கொடுத்தார்களா என்றால் தானமாக கொடுத்தார்கள் என்கிறார் சாட்சி. அந்த தானத்தை பதிவு செய்திருக்கிறார்களா என்றால் பதிவு செய்திருக்கிறார்கள். எங்கு பதிவு செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை என்கிறார் சாட்சி. அந்த தானப்பத்திரத்தை யார் எழுதினார்கள், யார், யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

மறு விசாரணை- இல்லை